**தலைப்பு 210 - தகவல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 210 - தகவல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 நவம்பர் 29 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 239.00 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 212.97 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 26.03 மில்லியன் அதாவது 10.89 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 212.50 | 190.19 | 22.31 | 10.50 |
| மூலதனம் | 26.50 | 22.78 | 3.72 | 14.04 |
| மொத்தம் | 239.00 | 212.97 | 26.03 | 10.89 |

## 2.2 முற்பணக் கணக்கு

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 21001 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 8.50 | 8.49 | 7.00 | 7.25 | 40.00 | 29.23 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் 7002/0000/00/0246/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1.34 மில்லியனாக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் 6000/0000/00/0016/0075/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 8.66 மில்லியனாக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

தகவல் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமான துமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

## 3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை

திணைக்களத்தால் நிதிப்பிரமாணம் 454(2) இன் பிரகாரம் மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

**3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்ட ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்கும் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 3,454,947 ஆகும்.

**3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**பாதீட்டு முரண்கள்**

12 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் அந்த செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையிலான வீச்சில் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**3.4 கட்டுநிதிக் கணக்குகள்**

2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்திய நிதிப்பிரமாணம் 371(2) இற்கு முரணாக 9 உத்தியோகத்தர்களுக்கு 17 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,018,831 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

**3.5 பொது வைப்புக் கணக்கு**

பொது வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட 2 ஆண்டுகளை மிகைத்த வைப்புக்களின் பெறுமதி ரூபா 8,599,662 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 8,374,675 04 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புக்களாக இருந்தன. இவ்வைப்புக்கள் நிதிப்பிரமாணம் 571(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

21001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 241,593 தொகையும் மரணமடைந்த உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து ரூபா 19,679 தொகையும் 15 ஆண்டுகளாக இருந்து வந்த போதிலும் அக் கடன் மீதிகளை கணக்காய்வு திகதியான 2017 யூன் 27 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

**3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.7.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்திற்கு சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் அமைப்பு வரைபடம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம், உள்ளகக கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த கொள்வனவுத் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.
அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(அ) (ஆ) பிரிவின் பிரகாரம் கொள்வனவு நிறுவனத்தினால் குறைந்தது 03 ஆண்டு காலலப்பகுதிக்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்ட பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.3 உள்ளகக் கணக்காய்வு

திணைக்களத்திற்காக உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் மூலம் மீளாய்வாண்டின் போது திணைக்களத்திற்காக 07 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 06 உள்ளகக் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக திணைக்களத்தின் முகாமைத்துவத்தால் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்ட அமர்வு நடாத்தப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தால் மீளாய்வாண்டின்போது 02 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

(i) முறையான சாத்திய ஆய்வொன்று மேற்கொள்ளாது 2.1 சதவீத வட்டி விகிதத்தின் அடிப்படையில் 1999 திசெம்பர் 10 ஆந் திகதி வழங்குனர் மற்றும் தகவல் திணைக்களத்திற்கிடையே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் அரசாங்கத்திடமிருந்து கிடைத்த கடன் உதவியின் கீழ் 9,150,000 பிரான்ஸ் பிரேங்க் (யூரோ 1,442,601) இற்குச் சமமான ரூபா 102.2 மில்லியனுக்கு 2003 ஆம் ஆண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட நிற இரசாயன கூடத்திற்கான உபகரணங்கள் 2017 யூலை வரையிலும் விளைவற்றும் உரிய பராமரிப்பு இன்றியும் காணப்பட்டன. இது தொடர்பாக 2010 ஆம் ஆண்டில் மூன்று நபர்களை கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன், அந்த இயந்திரத்தை பகிரங்க கேள்வி கோரலின் மூலம் விற்பனை செய்வதற்கு அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தால் 2017 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தின் ஒலிப் பிரிவில் 160KVA இயலளவையுடைய பிரேக்கர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்காக 2015 ஒக்தோபர் 12 ஆந் திகதி ரூபா 1,201,480 தொகை இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த பிரேக்கர் 2017 யூலை 30 ஆந் திகதி வரையிலும் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 507(2) இன் பிரிவு, நிதிப்பிரமாணம் 757(2) பிரிவு மற்றும் 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை 2017 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தால் 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1.4 ஆம் பந்தியின் பிரகாரம் 2013,2014 மற்றும் 2015 ஆண்டுகளிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் வழங்கப்பட்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக் நடவடிக்கை எடுக்கப்பட்டிருகக்வில்லை.

### 3.9 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பற்றாக்குறை தொடர்பாக திணைக்களத்தால் சீர் செய்யப்படாத பந்திகளின் தொடர்பு கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | |
| 2014 | 4.2 | 2007 பெப்ரவரி 24 ஆந் திகதிய சீஎஸ்ஏ/பீ1/140/2007 ஆம் இலக்க சனாதிபதி செயலகச் சுற்றறிக்கைக்கு முரணாக அதிக விலைகளில் ஆடம்பர அறை வசதிகள் பெற்றுக் கொள்வதற்காக ரூபா 611,788 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கான ஆவணங்கள் எதுவும் திணைக்களத்தின் கொள்வனவுப் பிரிவில் காணப்படவில்லையென்பதை 2015 நவம்பர் 24 ஆந் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2014 | 4.13 | 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் ஊடகக் கலந்துரையாடல்களுக்காக உணவு வழங்கும் போது ரூபா 1,156,288 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும், மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| 2014 | 4.17 | ஆராய்ச்சி விடய பட்டப்படிப்பினை விடயமொன்றாக பயிலுகின்ற மூன்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 07 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபட வேண்டிய விசேட ஆராய்ச்சி அலகொன்று திணைக்களத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. நாட்டின் அபிவிருத்தி தொடர்பான துறைகளை ஆய்வு செய்வதற்கு அந்தப் பிரிவிற்கு கையளிக்கப்படாமல் முறையற்ற விதத்தில் கேள்வி கோரி வெளிநிறுவனமொன்றிற்கு ரூபா 3,380,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட அறிக்கை எந்த நடவடிக்கைக்காகவும் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 2015 | 4.7 | தகவல் திணைக்களத்தின் புதிய ஊடக நிலையத்தின் நிர்மாணம் தொடர்பாக ஒப்பந்தக்காரருக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 6,623,634 தொகையினை அறவிடுவதற்கு பொறியியலாளர் கூட்டுத்தாபனம் பரிந்துரைத்திருந்த போதிலும் மேலதிகமாக கொடுப்பனவை 2017 செப்தம்பர் 30 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.
திணைக்களத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவது தொடர்பில் மிக முக்கியமான கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றும் திரைப்பட துறைக்காக 2005 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிலும் உபகரணங்களுக்காக மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2006 ஆம் ஆண்டின் போது உபகரணங்கள் கொள்வனவின் பின்னர் 10 ஆண்டு காலப்பகுதியில் உபகரணங்கள் போதியளவும் தரமானதுமான உபகரணங்கள் கொள்வனவு இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.11 நிதி மோசடி வடிவிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை ஊடாக சங்கத்தின் மதுபானம் விற்பனை செய்யும் அனுமதிப்பத்திரம் 2008 ஆம் ஆண்டு முதல் முறையான உடன்படிக்கையின்றி வெளிநபரொருவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மதுவரி ஆணையாளரின் கடிதத்தின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டிற்காக அம்முகவரிக்கு அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும் முன்னர் குறித்த அனுமதிப்பத்திர ம் வெளித்தரப்பினருக்கு கையளித்தமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 4,653,515 தொகையை அறவிடுவதற்கோ அல்லது சட்ட விரோதமாக மதுபான அனுமதிப்பத்திரமொன்று வைத்திருத்தல் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அபிவிருத்தி தொடர்பாக மானிட கொள்கைகளை விசாரித்து வெளிக்களப் பரிசோதனை மற்றும் மனித நேய பணிகளுக்கு முன்னரும் பின்னரும் தமிழ் மக்களின் நலன்களுக்காக அரசினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் எல்.ரீ.ரீ.ஈ தற்போது சர்வதேசத்தில் செயற்படும் முறைகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்துவதற்காக ஆராய்ச்சி ஒப்படையொன்றைத் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதற்காக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றாமல் ரூபா 4,130,000 மனித மற்றும் அபிவிருத்தி தொடர்பான கேந்திரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும், அவ்வாறான நிறுவனமொன்று குறிப்பிடப்பட்ட முகவரியில் இல்லையென கண்டறியப்பட்டது. அவ்வாறே சமர்ப்பிக்கப்பட்ட மற்றைய இரண்டு கேள்விதாரர்களும் முகவரியில்

இல்லையென கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம் இக் பெறுகையின் போது சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை.

### 3.12 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 08 | 09 |
| (ii) | மூன்றாம் நிலை | 16 | 04 | 12 |
| (iii) | இரண்டாம் நிலை | 238 | 175 | 63 |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 47 | 06 |
| (v) | ஏனைய (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 20 | 05 | 15 |
| | மொத்தம் | 344 | 239 | 105 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 105 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013 ஆம் ஆண்டில் செப்தெம்பர் 02 ஆந் தியதிய கடிதத்தின் மூலம் இலங்கை தொழில்நுட்ப சேவையின் (III, II, I) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (கட்டிடங்கள் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு) பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக திணைக்களத்தின் பெறுகை வேலை சில பெறுகை வழிகாட்டல் கோவையின் கிரமமாக செய்வதற்கு முடியாதிருந்தது. ஆதலால் பெறுகை நடவடிக்கையின் போது வேறு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு பெறுவதற்கு நேர்ந்திருந்தது.

(இ) திணைக்களத்திடம் Graphic வடிவமைப்பாளர் ஒருவர் இல்லாமையால் சகல Graphic சேவைகளும் பணம் செலுத்தி வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்திருந்தது. இதற்கு மாற்றுவழியாக இருக்கும் உத்தியோகத்தர் Graphic தொடர்பாக பயிற்சியொன்று வழங்குவதற்கு அல்லது உத்தியோகத்தர் ஒருவரை புதிதாக ஆட்சேர்க்கப்பட்டோ இருக்கவில்லை.

(ஈ) பதவியணியினர் பயிற்சிக்காக வருடாந்தம் பணம் ஒதுக்கப்பட்ட போதிலும் மனித வள முகாமை கைநூலொன்று அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நடைமுறையொன்று பதவியணியினர் பயிற்சிக்காக காணப்படவில்லை. திரைப்பட பிரிவு பயன்படுத்தப்படும் உபகரணங்களில் தொழில்நுட்ப மேம்படுத்தலுடன் அதற்கு ஈடாகும் வகையில் அறிவில் பூரணமாக இருக்க வேண்டிய போதிலும் உத்தியோகத்தர்களுக்கு போதியளவு பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.